**செ.வெ.எண்.40** **நாள் : 18.03.2021**

# பத்திரிக்கைச் செய்தி

இந்திய தேர்தல் ஆணையத்தால் நடத்த பெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ முன்னிட்டு, அரியலூர் மாவட்டத்தில் உள்ள 149 அரியலூர் சட்டமன்ற தொகுதிக்கு 1 தேர்தல் பொதுபார்வையாளரும், 150 ஜெயங்கொண்டம் சட்டமன்றத்தொகுதிக்கு 1 தேர்தல் பொது பார்வையாளரும், 2 சட்டமன்ற தொகுதிக்கு ஒருவர் வீதம் 1 தேர்தல் செலவின பார்வையாளரும், 1 தேர்தல் காவல் பார்வையாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி 4 தேர்தல் பார்வையாளர்களில் தேர்தல் செலவின பார்வையாளர் கடந்த 11.03.2021 அன்று வந்து பணியாற்றி வரும் நிலையில், மற்றும் 3 தேர்தல் பார்வையாளர்கள் 18.03.2021 அன்று வருகை தந்து 19.03.2021 அன்று முதல் தேர்தல் பணிகள் மேற்கொள்ள உள்ளார்கள்.

**149.அரியலூர்** சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் பணி மேற்கொள்ளவுள்ள **தேர்தல் பொது பார்வையாளர் திரு.பரத் யாதவ், இஆப.,** அவர்களின் கைப்பேசி எண்.8438660215, மின்னஞ்சல் முகவரி - genobsari@gmail.com, **மற்றும் 150.ஜெயங்கொண்டம்** சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் பணி மேற்கொள்ள **தேர்தல் பொது பார்வையாளர் திருமதி.சி.சத்யபாமா, இஆப.,** அவர்களின் கைபேசி எண்.8438670215, மின்னஞ்சல் முகவரி - genobsjkm@gmail.com,

149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் பணி மேற்கொள்ளவுள்ள **தேர்தல் செலவினப்பார்வையாளர் திரு.நிமாஷெரிங் ஷெர்பா, இவப.,** அவர்களின் கைப்பேசி எண்.8438680215, மின்னஞ்சல் முகவரி - expobsari@gmail.com, expobsjkm@gmail.com மற்றும் 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் பணி மேற்கொள்ள **தேர்தல் காவல் பார்வையாளர் திரு.அஜய்குமார் தாகூர், இகாப.,** அவர்களின் கைபேசி எண்.8438690215, மின்னஞ்சல் முகவரி - polobsariyalur@gmail.com.

மேற்கண்ட தேர்தல் பார்வையாளர்களில், 150 ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் பொதுபார்வையாளர் மட்டும் ஜெயங்கொண்டத்தில் உள்ள சுத்தமல்லி பயணியர் மாளிகையிலும், ஏனைய 3 தேர்தல் பார்வையாளர்களும், அரியலூர் சுற்றுலா மாளிகையிலும் தங்க உள்ளார்கள். பொதுமக்கள் தேர்தல் தொடர்பாக ஏதேனும் புகார் தெரிவிக்க விரும்பினால், சம்மந்தப்பட்ட தேர்தல் பார்வையாளர்களின் கைப்பேசி எண்ணுக்கு அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என அரியலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**